காங்கிரஸ்-குட்டி இட்லர்கள் வளர்க்கும் சபை

Phone: No. 4502 Regd: No. M 5458

விலை முக்காலணு இலங்கை 8 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 9—2—51 | மணி 67

நாங்களா நாஸ்தீகர்கள்?

—————(o)—————

சமுதாயம் நல்வழிப்பட நல்லாட்சி கோருகிறோம்

……………(ஃ)……………

நெகமத்தில் நெடுஞ்செழியன் பேருரை

செ ம், ஜன. 31—

நெகமத்தில் 31-1-51-ந் தேதி யன்று தோழர் க சிதம்பர (கவுண்டர்) அவர்களது தலைமையில்தோழர்கள் சு. இளமாறன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் 'நாகர்கோவில்' மைதானத்தில் கூடியிருந்த சுமார் நான்காயிரம் மக்கள் முன்பு சொன்மாரி பொழிந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் சு. இளமாறன் சுமார் அரை மணி நேரம் பேசிய பின் தோழர் இரா. நெடுஞ்செழியன் தனது பேச்சைத் துவக்கினர்.

தலைவர் அவர்களே! ஈண்டு குழுமியுள்ள பெருமக்களே! முதற்கண் எனது வணக்கம். திராவிடக் கழகத்தைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் தவறான பல கருத்துக்கள் உங்களிடையே கூறப்பட்டிருக்கும்.

"நாங்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் சுயராஜ்யம், அராஜ்யமாகிவிடும் என்று கூறுகின்றவர்களல்ல நாம். மற்றவர்களது கூட்டங்களுக்குச் சென்று அவர்கள் கூறுகின்றவற்றைக் கேட்காதீர்கள் என்று கூறும் சிறுமதியாளர்களல்ல நாம். யார் வந்து எது கூறினாலும் அதையும் கேட்டு, உங்களுடைய சிந்தனையைச் செலவுசெய்து முடிவு காணுங்கள் என்றுதான் கூறுகிறோம்.

வைதீகர்கள் கூறுவர் 'தி மு. கழகத்தினர் பாவிகள்' என்று. மற்றும் சிலர் 'இதிகாச—காவிய ரசம் தெரியாதவர்' என்றும் கூறுவர். இப்படியாகப் பலர் பலராக எங்களைப்பற்றி அறிமுகம் செய்திருக்கின்றார்கள். அவர்கள் எண்ணப்படி குற்றவாளியாகக் குற்றக் கூண்டிலே நிற்கின்றேன். உங்களுக்கு யாரும் பதவி தராமல் இருந்தாலும், நான் ஒரு இரண்டு மணி நேரம், நீங்கள் நீதிபதிகளாக இருக்க அனுமதிதருகின்றேன். பின் எனது குற்றச்சாட்டை-குறைகளை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். பிறகு, நீதிபதிகளாக இருக்கும் நீங்கள் உங்களுக்குள்ளாகவே தீர்ப்பைக் கூறிக்கொள்ளுங்கள்.

"1941-ம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படி 100 க்கு 12 பேர்கள் தான் படித்தவர்கள் நம் நாட்டில். மீதி 88 பேர்கள் எழுத, படிக்க, தனது கையெழுத்தைக் கூட போடத் தெரியாதவர்கள். வெளிப்படையாகக் கூறவேண்டுமானல் "தற்குறிகள்", இத்தகையோர் பெரும்பாலும் கிராமங்களில் வாழ்பவர்கள்.

அவர்களுக்குக் கர்ணம், பட்டா, மணியம் ஆகியோர்களின் அதிகாரம் என்ன? அவர்கள் தங்கள் அதிகார எல்லைக்கு மேற்பட்டு அதிகாரம் செய்கின்றனரா? அல்லது வரம்பக்குள் நடந்துகொள்ளுகின்றனரா? என்பவைகூடத் தெரியாது-இத்தகையோருக்கு ஜனநாயகம், பாசீசம், சோஷலிசம், நாசீசம் பற்றி என்ன தெரியும்?-எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? இப்படியிருக்க,

நாங்கள் தேர்தலிலே நிற்பதில்லை என்று திட்டவட்டமாகக் கூறிவிட்ட பின்னும் காமராஜ் கோஷ்டியார் கூறுகின்றனர். 'அவர்களுக்குப் பயம்; ஆதலால்தான் தேர்தலில் நிற்க மறுக்கின்றனர்' என்று

மேலும், 'தி. மு. கழகத்தினர் வெள்ளையனுக்கு ஆதரவு தந்தவர்கள்' எனவும் கூறுகின்றனர். இந்தக் குறுகிய புத்தியுடையோர், என்னைப் போன்ற பல மாணவர்களும், நானும், வெள்ளையன் ஆட்சியின்போது தேசத் தலைவர்கள் அறிக்கைவிட்டநேரத்தில் அண்ணாமலைப் பலகலைக் கழகத்தை விட்டு வெளியேறிக் காங்கிரசில் சேர்ந்து 'வந்தேமாதரம்!' என்ற கோஷமிட்டு அதன் பயனாய் அடியும் உதையும் பெற்றவர்கள் தான். வெள்ளையனுக்கு மாலையணிவித்து வரவேற்றவர்கள் யாராவது தி. மு. கழகத்தில் உள்ளனரா? அல்லது வெள்ளையனுக்கு பூட்ஸ் தாங்கி அறிந்தவர்கள் யாராவது தி. மு. கழகத்தில் உள்ளனரா? இருக்க முடியுமா? அப்படியிருக்க,

"மட்டரகங்கள், மந்திரிகள், காமராஜ் கோஷ்டியினர், பண்டாரங்கள், பக்கிரிகள், உண்ணுதவன், அண்ணாமலைகள் கூறுகின்றனர் எங்களைப் பார்த்து, 'தேசத் துரோகிகள், ஏகாதிபத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

அப்பாதுரை-ஜீவா வழக்கு

…………………………………

இந்த ஆட்சியில் நீதி கிடைக்காது!

……………(ப)……………

பேச்சுரிமை போராட்டம் தொடர்ந்தே நடக்கும்!

சென்னை; பிப். 8—

சென்னை ஜார்ஜ்டவுன் பெஞ்சு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் இன்று காலை 7-30 மணிக்கு தோழர் கா. அப்பாதுரையார்-என். ஜீவரத்தினம் ஆகிய இருவர் மீது சிட்டி போலீஸ் ஆக்ட் 41-வது பிரிவுப்படி 31-1-51 மாலை அனுமதியின்றி கூட்டம் நடத்தியதாகப் பாலீசாரால் பதிவு செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கு கௌரவ மாஜிஸ்ட்ரேட் வி. எம். கடிகாசலம் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாஜிஸ்ட்ரேட்:-போலீஸ் அனுமதியின்றிக் கூட்டம் நடத்தியது தவறு. இதைப் பற்றி யாதாவது தெரிவித்துக்கொள்ள இஷ்டப்படுகிறீர்களா? என்று கேட்டார்.

தோழர் என். ஜீவரத்தினம்: இந்த ஆட்சியில் எங்களுக்கு நீதி கிடைக்காதென்ற காரணத்தால் நாங்கள் எதிர்வழக்காடப் பிரியப்படவில்லை: சிட்டி போலீஸ் ஆக்ட் 41 வது பிரிவு சட்டம் யாவருக்கும் பொதுவானதாகக் கருதப்படும் வரையில் பேச்சுரிமைக்காகப் போராட, நாங்கள் தயங்கமாட்டோம். எங்களுடைய இப்போராட்டம் தொடர்ந்தே நடைபெறும்.

மாஜி:—இவ்வழக்கை 15-ந் தேதி ஒத்திவைத்திருக்கிறோம். அதுவரை நீங்கள் எந்தவித நிபந்தனையுமின்றிப் போகலாம்: அன்றைய தினம் கோர்ட்டுக்குவந்தால் போதுமானது.

ஜீவ:—வழக்கை இன்றே விசாரித்து முடித்துக்கொள்வது நல்லது. நாங்கள்தான் எதிர்வழக்காடப்போவதில்லையே.

மாஜி:—அது முடியாது. மற்றும் இரு மாஜிஸ்ட்ரேட்டுகள் இன்றையத்தினம் கோர்ட்டுக்கு வரவேண்டியவர் வரவில்லை. அவர்களைக் கலக்காமல் நான் ஒரு முடிவுக்கும் வர முடியாது. வழக்கு 15-ந் தேதிக்கு ஒத்திவைத்திருக்கிறேன். அன்று நீங்கள் வரலாமென்று கூறி வழக்கைத் தள்ளிவைத்துவிட்டார்.

கோர்ட்டிற்குக் கழக முக்கியஸ்தர்களும் பொதுஜனங்கள் பலரும் வழக்கைக் கவனிக்க வந்திருந்தனர்.

வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

அறிவிப்பு

நமது மாவட்டத்தில் இம்மாத இறுதிக்குள் நடைபெறப் போகும் எழுத்துரிமை, பேச்சுரிமை அறப்போரில் கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள் உடனே என்னிடம் உங்கள் பெயர்களை முழு முகவரியுடன் பதிவு செய்துக்கொள்ளுங்கள் 16—2—51க்குப் பின்னால் வரும் பெயர்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பு:—கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள் தங்கள் விண்ணப்ப பாரங்களில் அருகிலுள்ள கிளைக்கழகச் செயலாளரால் அங்கீகரிக்கப் பட்டதாய் இருந்தால் உடனே எடுத்துக்கொள்ளப்படும், மற்ற விபரம் வேண்டுவோர் தங்கள் செலவில் நேரில் வந்து தெரிந்துகொள்ளவும்.

கே. சுப்ரமண்யன்
செயலாளன்
வட. ஆ. மா தி. மு. க. போளூர்

மாலைமணி

சென்னை 9—2—51 வெள்ளிக்கிழமை

'நல்லது'-க்கும் 'இல்லை' தான்

சென்னை இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்களுடைய குறைகள் சிலவற்றை நீக்கித்தர வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தைப் பன்முறைக் கேட்டும் சென்னை அரசாங்கம் 'இல்லை'ப் பாட்டைப் பாடிக்கொண்டு வரவே, அடையாள மறியல் நடத்துவதென்று முடிவு செய்து 5-ந் தேதி முதல் 7-ந் தேதி வரை அமைதியான முறையில் மறியல் செய்து, அவர்களுடைய குறைகள் கவனிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதன்மீது 8-ந் தேதி மீண்டும் வகுப்புகளுக்குச் சென்றுள்ளனர்.

இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை, நிறைவேற்றக் கூடியவை, அவசியம் நிவைவேற்றித் தீரவேண்டியவையாகவே இருக்கின்றன.

இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்களின் நிலை ஆங்கில மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குச் சமமான நிலைக்குக் கொண்டு வரப் படவேண்டும்.

இக்கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்களை 1914-வது ஆண்டைய மருத்துவப் பதிவுச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்தல் வேண்டும்.

ஆங்கில மருத்தவம் போதிக்கும் வகுப்புக்களை ஆட்டு மந்தைகளைப்போன்று 200 மாணவர்களை ஒன்ருகக் கூட்டி வைத்துக் கொண்டு குழப்பாமல், 1947-ல் நடந்தமாதிரி L. I. M. மாணவர்களுக்குத் தனியாகவும், G. C. I. M. மாணவர்களுக்குத் தனியாகவும் வைத்து நடத்துதல் வேண்டும்.

நவீன விஞ்ஞானம், பிரசவ மருத்தவம், அறுவைச் சிகிச்சை முதலியவற்றின் பரீட்சைகளை 4-வது ஆண்டில் நடத்தாமல் ஆங்கில மருத்துவக் கல்லூரிகளில் நடத்துவதுபோன்று 5-வது ஆண்டில் நடத்தப்பட வேண்டும்.

இந்திய மருத்துவத்திலும் ஆங்கில மருத்துவத்திலும் தேர்ச்சியடைந்தவர்கள் என்று பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்ளக் கூடியவாருன முறையில் பட்டங்கள் நற்சான்றிதழ்கள் (டிப்ளமா) வழங்கப்படுதல் வேண்டும்.

பட்டம் பெற்ற மாணவர்களை அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அவுஸ் சர்ஜன்களாக நியமிக்கவேண்டும்,

பட்டம் பெற்ற மாணவர்களை அரசாங்கம் நடத்தும் பி. ஜி. கோர்சுக்குப் படிக்க அனுமதிக்கவேண்டும்.

இந்திய மருத்துவக் கல்லூரிக்கு, இந்திய மருத்துவமும், ஆங்கில மருத்துவமும் சேர்ந்த கல்லூரி எனப் பெயரிடுதல் வேண்டும். கல்லூரியின் வகுப்பறைகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டு, கல்லூரிக்கான இடம் விஸ்தரித்து அமைக்கப்பட வேண்டும்.

கல்லூரியில் மாணவர்களுக்கு வேண்டிய எல்லாக் கருவிகளும் பிற வசதிகளும், மருந்துச் செடித் தோட்டங்களும், பல பிணியாளர்கள் இருப்பதற்கான விரிவான வசதிகளையுடைய ஆஸ்பத்திரியும், மருந்து செய்யுமிடங்களும் விரிவான முறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவைதாம் இந்திய மருத்துக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகள்.

இந்தக் கோரிக்கைகளுக்காகத்தான் மாணவர்கள் அடையாள மறியல் செய்திருக்கின்றனர். அமைச்சர்களைப் பேட்டி கண்டிருக்கின்றனர். பல சட்டசபை அங்கத்தினர்களிடம் முறையிட்டுக் கொண்டனர்; காங்கிரஸ் கட்சித் தலைவரிடம் கூறினர்; பத்திரிகாசிரியர்களிடம் கூறினர்,

இவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதால், அரசாங்கத்துக்கு எந்த விதமான செலவுமில்லை. வேறு சங்கடங்களுமில்லை.

ஆனல், மருத்தவ மாணவர்களின் கோரிக்கைகளோ மிக மிக இன்றியமையாதவை; நியாயமானவை; நேர்மையானவை; மக்கள் நலனுக்குத் தேவையானவை. ஆங்கில மருத்துவ முறையை ஒழுங்கானபடி தங்களுக்குக் கற்றுக்கொடுத்து, இந்திய முறை ஆங்கில முறை ஆகிய இரு மருத்துவ முறைகளிலும் தங்களைத் திறமையுள்ளவர்களாகச் செய்யக்கூடிய வகையில் பாடத்திட்டம் ஐந்தாண்டுத் திட்டமாக மாற்றியமைக்கப்படவேண்டும் என்று மாணவர்கள் கோரினல், இதை மறுக்க எவருக்கேனும் துணிவு? இந்தக் கோரிக்கைக்கு 'இல்லை' என்றுகூற வாய்தான் வருமா? இதற்காக மாணவர்கள் மறியல் செய்யும் அளவுக்கு விடத்தான் நல்ல அரசாங்கம் துணியுமா?

ஆனல், நம் அரசாங்கத்தில் இந்த நல்ல கோரிக்கைகளுக்குக் கூட இல்லை என்னும் பதிலும், அதன் பலனுக மாணவர் மறியலும் நடைபெற்றுத்தான் இருக்கின்றன.

நம் அரசாங்கம், ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்போர், இத்தகைய நல்ல செயல்களைக் கூடச் செய்யச் சக்தியற்றிருந்தால், இவற்றைக் கூடத் தங்கள் எஜமானர்களைக் கேட்டுக்கொண்டு செய்வதென்ருல், இந்நிலையை—நம் நாட்டு அரசாங்கத்தின் நிலைமையை என்னென்று கூறுவது! இனியேனும் சென்னை அரசாங்கம் தணிவை வரவழைத்துக் கொண்டு, மாணவர்களின் இந்த நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிவைக்க முன்வரவேண்டும்.

ஏனெனில், இந்திய மருத்துவமும், ஆங்கில மருத்துவமும் இணைந்தால்தான் உண்மையிலேயே, மக்கள் பிணிபோக்கும் தொண்டினைச் சரிவர நிறைவேற்றிவைக்க முடியும். வெறும் ஆங்கில மருத்துவம் பல பிணிகளுக்கு மருந்தில்லா நிலையில்தான் இருக்கிறது. மேலும், மருந்துகளுக்குப் பிறநாடுகளை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கும் நிலையில்தானிருக்கிறது. எனவே, இரு மருத்துவங்களையும் இணைத்து நல்ல முறையில் ஆராய்ச்சிகள் நடத்தவும், திறமையான மருத்துவர்கள் வெளிவரவும் செய்ய வேண்டிய கடமை நம் அரசாங்கத்துக்கிருக்கிறது. இந்தக் கடமையை நம் அரசாங்கம் நல்ல முறையில் நிறைவேற்றிவைக்க முன்வர வேண்டுவது இன்றியமையாததாகும்.

மீண்டும் மத்திய அரசாங்கத்தில் ஊழல்

—————0—————

தெரிந்த வரையில் ஒருகோடி ரூபாய் நாசம்

—————(0)—————

உயர்தர அதிகாரிகளின் போக்கு

புதுடில்லி, பிப். 8—

இராசயன உரம் 4 லட்சம் டன் வாங்க மத்திய அரசாங்கம் அனுமதித்திருந்தபோது சுமார் 5½ லட்சம் டன்னுக்கு (16 கோடி ரூபாய் மதிப்புடையது) ஆர்டர் கொடுத்து அதில் பெரும் பகுதியைப் பயன் படுத்தாமல் போட்டு வைத்திருந்ததாகவும், இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்டிருந்ததாகவும் கி. எஸ். டி. சாமி என்னும் விவசாய இலாக்கா இரசாயன எரு வகை டைரெக்டர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். இந்த வகையில் மத்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் ஒரு கோடி ரூபாய் என்பதற்காகத் தோழர் முன்ஷி தெரிவித்தார்.

———

நான்கு வல்லரசுகள் கூடிப்பேசுவது சாத்யமல்ல

லண்டன், பிப்,8:—

மேற்கு வல்லரசுகளுக்கு ரஷ்யாவிடமிருந்து கடைசியாக வந்த குறிப்பின்பலனுக நான்கு வல்லரசுகள் மகாநாடு நடப்பது சாத்யமல்ல வென்று கூறப்படுகிறது.

மாஸ்கோ பாரிஸில் பூர்வாங்கபேச்சு வார்த்தை நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறதே ஒழிய எந்த விஷயங்கள்பற்றிப் பேசுவது என்ற விஷயம் பற்றி எல்லாம் எதுவும் தெளிவாக சொல்லவில்லை.

இந்த பூர்வாங்க மகாநாட்டிற்கும் எந்ததேதிதனக்கு வசதியாக இருக்கும் என்பதையும் ரஷயா அறிவிக்க வில்லையாம்.

ரஷ்யாவுக்குப் பதில் அனுப்புமுன் ரஷ்யா உபயோகித்துள்ள சில வார்த்தைகளின் அர்த்தம்விஷயமாக மூன்று வல்லரசுகளும் சேர்ந்து ஆலோசிக்கப்படும் எனத் தெரிகிறது.

காஷ்மீர் பிரச்னை

லண்டன், பிப். 8—

காஷ்மீர் பிரச்னை ஐ நா. பாதுகாப்புக் கவுன்சில் முன்பு இவ்வாரக் கடைசியிலோ அல்லது அடுத்த வார ஆரம்பத்திலோ விவாதத்திற்குவரும்எனநம்பப்படுகிறது.

பிரிட்டிஷ் கோஷ்டியினர் காஷ்மீர் சம்பந்தமாக ஒரு நகல் தீர்மானம் தயாரித்து வருவதாகவும், இதைத் தயாரிப்பதில் ஸர் கிளேட்வின்ஜெப் பிறகு உதவியாக காமன்வெல்த் உறவு காரியாலய காஷ்மீர் விவகார நிபுணர் ஆர். டபிள்யூ. டி. பௌலர் லேக்சக்ஸஸிலிருந்து வருகிருர் என்றும் கூறப்படுகிறது.

இத்தீர்மானத்தில் என்ன வற்புறுத்தப்படுகிறது என்பதுபற்றி எதுவும் தெரியவில்லை என்ருலும் அநேகமாக காஷ்மீர் விஷயமாக ஏற்கனவே வெளியிடப்பட்ட பழைய யோசனைகளேதான் அதில் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

பாகம் போடும் யோசனையா ?

ஹிந்துக்கள் அதிகம் வசிக்கும் காஷ்மீர் இந்தியாவுக்கும் முஸ்லீம்கள் அதிகம் வசிக்கும் காஷ்மீர் பாக்கிஸ்தானுக்கும் சேர்க்கப்பட்டு விட வேண்டும் என்றும் இவைகளில் சேராத இடங்கள் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்படவேண்டும் என்றும் இத்தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கலாம் என்று ஐ. நா. வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

இந்த யோசனை ஏற்கப்பட்டால் இப்போதுள்ள எவ்வளவோ முட்டுக்கட்டைகள் நீங்கிவிடும் எனத் தெரிகிறது.

தாழ்த்தப்பட்ட எடுபிடி ஆட்களுக்கு வேலையில்லை

—————(—o)—————

ஆனால் உயர்ந்த குலத்தவர் வேலை தரப்பட்டார்

—————(:0:)—————

சென்னை அரசாங்க மர்மங்கள்

சென்னை, பிப் 8—

சென்னை அரசாங்கப் பொது இலாகாவில்தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த தங்கதுரை, ஜகதீசன் என்னும் இருவர், எடுபிடியாட்களாக வேலை செய்துகொண்டிருந்தனர். இவ்விருவரும் பத்தாவது வகுப்பு வரை படித்தவர்கள். இவ்விருவரும் வேலையினின்றும் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்.

இதுபற்றிச் சென்னைச் சட்டசபையில் சுவாமி சகஜானந்தா கேள்வி கேட்கையில், இவ்விருவரையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டுக் கிருஷ்ணமூர்த்தி என்பவரை வேலையில் அமர்த்தியிருப்பது உண்மைதானா என்று வினவினார். கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவ்விலாக்காவிலுள்ள அதிகாரிகளுள் ஒருவரின் உறவினரா என்றும் கேட்டார்.

முதலமைச்சர் இதற்குப் பதிலளிக்கையில் தங்கதுரை, ஜகதீசன் ஆகிய இருவர்களை நீக்கி விட்டதற்குப் பதிலாகக் கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்படவில்லை என்றும், கிருஷ்ணமூர்த்தி எந்த அதிகாரிக்காவது உறவினரானென்பது தெரியாதென்றும், கிருஷ்ணமூர்த்தி தனிப்பட்ட முறையில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும், கிருஷ்ணமூர்த்தி பார்ப்பனக் குலத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறினார்.

———

கோலார் இடைநிலைக் கல்லூரி தமிழ் மன்றம்

———

இரண்டாம் ஆண்டு நிறைவிழா

10-2-51 சனிக்கிழமை மாலை 5-மணிக்குக் கல்லூரி முற்றத்தில் நடைபெறும். அவ்வமயம் 'திராவிடநாடு' ஆசிரியர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் "புது வாழ்வு" என்னும் பொருள் பற்றி விரிவுரைநிகழ்த்துவார், பெங்களூர் கார்ப்பரேஷன் பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் எம். எ. அமலோற்பவம் அவர்கள் தலைமை தாங்கித் தலைமைச்சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்துவார்.

———

மௌனப்பியானோ

கேப்டவுன், பிப். 8:—

வாசிப்பவர்களுக்கு மட்டுமே 'ஹெட்போன்' சாதனம் மூலம் கேட்கும் பியானோ ஒன்றை லூலஜெர்டன்பாக் என்ற பியானோ வாத்ய நிபுணர் கண்டு பிடித்திருக்கிறார்.

வகுப்புரிமை-வடநாட்டுச் சுரண்டல் மாநாடு-நெல்லை மாவட்டம்

———

வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மாநாடு

17-2-51 சனிக்கிழமை எஸ். குருசாமி தலைமையில், சாமி சிதம்பரனார் மாநாட்டைத் திறந்துவைத்து, ஈ வே. ரா. மணியம்மையார் கொடி உயர்த்துவார்.

வகுப்புரிமை மாநாடு

18-2-51 ஞாயிறு டாக்டர் வ. கிருஷ்ணசாமி தலைமையில் டி. பி. வேதாசலம் மாநாட்டைத் திறந்து வைப்பார். பெரியார். ஏ. பி. சனார்த்தனம் புலவர் இலக்குவனார்-திருக்குறள் முனுசாமி, முதலியவர் பேசுவார்கள். இரண்டு நாட்களும் இராதா நாடகம் உண்டு.

சென்னைமாவட்ட தி. மு. க. அவசரக் கூட்டம்

———

11-2-51 ஞாயிற்றுக்கிழமை பகல் 3-மணிக்கு சென்னை தங்கசாலை வீதி 202-வது கழக அலுவலகத்தில் சென்னை மாவட்ட தி. மு. கழக கமிட்டி அவசரக் கூட்டம் ஒன்று நடைபெறும். அச்சமயம் 1-2-51 ல் கருப்புக்கொடி பிடித்து சிறை சென்ற தோழர்களைப்பற்றியும், 31-1-51 ல் நடந்த கூட்டத்தில் கைதி செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுவரும் ஜீவா-அப்பாதிரையார் அவர்களைப்பற்றியும் யோசிக்கப்படும். அங்கத்தினர்கள் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கே வரும்படியும் இதையே அழைப்பாகக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஏ. கே. சாமி
கே. எம். கண்ணபிரான்
உதவி காரியதரிசிகள்

———

ரஷ்யாவுடன் வர்த்தக உறவு ஏற்படலாம்

———

ரஷ்யாவுடனும் இராக்வர்த்தக உறவை ஏற்படுத்திக்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

10—2—51

வளவனூர்
தோழியர் சத்தியவாணிமுத்து

11—2—51

சென்னை
சத்தியவாணிமுத்து.

கோவை
ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

திருவாரூர்
இரா. நெடுஞ்செழியன்

சென்னை கோகலேமண்டபம்
தோழர்கள் கே. ஏ. மதியழகன், க. அன்பழகன்.

13—2—51

போதட்டூர் பேட்டை
ஈ. வெ. கி. சம்பத், தில்லைவில்லாளன்.

18—2—51

குன்னூர்
தோழியர் இராமாமிருதத்தம்மையார்.

பாடத்திட்டத்தை மாற்ற வேண்டும்

———

பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றக் கலைவிழாவில் அறிஞர்கள் வற்புறுத்தல்

சென்னை, பிப்:6—

31-1-51லிருந்து பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் மன்றத்தின் சார்பில் நடை பெற்றுவந்த கலைவிழா நேற்று மாலை முடிவடைந்தது பரிசளிப்பு விழாவில் டாக்டர் மு. வரதராசன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று ஒருஉரை நிகழ்த்தினார். இயல், இசை, நாடகம் ஆகியமுத்தமிழை வளர்க்கவே கலைவிழாவை நடத்திவருவதாகக்குறிப்பிட்டார். தோழர் ம.இராதா கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் தலைமைதாங்கிப் பேசுகையில்; போட்டி பொறாமை ஒற்றுமையின்மை ஆகிய குணங்களை விட்டொழித்தால் தமிழர்கள் முன்னேறலாம் என்று குறிப்பிட்டார். தோழர் இராசமாணிக்கம் பி. ஓ. எல். அவர்கள் பேசுகையில் கலை உணர்ச்சிக்கு இடமில்லாத வகையில் இருக்கின்ற பாடதிட்டத்தை மாற்றவேண்டும் என்றும் கற்றறிந்தோரின் மனஉணர்ச்சியாகிய இலக்கியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றும், எல்லாத் துறைகளிலும் உயர்ந்த நடைதானென்று கூறுவது எதற்கு என்றும் எளியநடை என்பது தமிழரின் எலும்புருக்கிநோய் என்றும் கூறினார். தோழியர் இந்திராணிபால சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், கல்வியுடன் மற்றகலைகளின் வளர்ச்சிக்குக்கலைவிழாக்கள் அவசியம் என்று குறிப்பிட்டு விட்டு இயல், இசை, நாடகம்ஆகிய துறைகளில் வெற்றி பெற்ற கல்லூரிகளுக்கும் கல்லூரிமாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கினார்.

பின்னர் பேபிவிமலா நடனவிருந்து தரதோழர்கள் அ. ச. ஞானசம்பந்தம் அவர்களும் இராதாகிருஷ்ணப்பிள்ளை அவர்களும் விமலாவை வாழ்த்தி வெள்ளிக்கிண்ணம் வழங்க; தோழர் அன்பழகன் நன்றி கூற கலைவிழா இனிது முடிந்தது.

ஆசைத்தம்பியின் சிறைமொட்டை எதிரொலி!

——————(ஃ)——————

சர்க்காரின் மறு விசாரணை

சேலம், பிப் 6—

திருச்சி மத்திய சிறையில் தன்னுடைய, தன் நண்பர்களுடைய தலைமயிர் மொட்டையடிக்கப்பட்ட நிகழ்ச்சியை ஒட்டி, அதற்கு சர்க்கார் எடுத்துள்ள முயற்சியை கவனித்துத்தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி விடுத்த அறிக்கையாவது:-

சென்னை அரசாங்கத்தாரால் 153-எ பிரிவின் கீழ் என்மீதும் என் நண்பர்களான துறையூர் கலியபெருமாள், தங்கவேல் ஆகியவர்கள்மீதும் தொடரப்பட்ட வழக்கில் நாங்கள் சிறைசென்றதும், திருச்சி மத்திய சிறையில் நாங்கள் மொட்டையடிக்கப்பட்டதும், 'மொட்டையடிக்கவில்லை' யென்று சர்க்கார் அறிக்கை விடுத்ததும், அதை மறுத்து நான் அறிக்கைவிட்டதும் எல்லோரும் அறிந்ததாகும்.

என்னுடைய அறிக்கைக்குப் பின் மறு விசாரணை செய்ய சர்க்கார் முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக நேற்றையதினம் சேலம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் என்னை அழைத்துச் சில விபரங்களைக் கேட்டார். நாங்கள் மொட்டையடிக்கப்பட்டு சிறையில் இருக்கும்போது எங்களைக் காண வந்த காங்கிரஸ் நண்பர் ஒருவரையும், கூட இருந்த சிறை(கைதிகள்) தோழர்கள் சிலரையும் விசாரிக்கலாம் என்றும், சிறையில் விசாரணை நடத்தும்போது, நான் அவசியம் நேரில் இருக்கவேண்டும் என்றும், மற்றப்படி சிறை அதிகாரிகள் கைதிகளை மிரட்டி விடுவார்களென்றும் எழுத்து மூலம் இன்னும் சில தகவல்களைக் கொடுத்தேன். அதன்படி சர்க்கார் ஒரு பாரபட்சமற்ற கமிட்டியை அமைத்து நேர்மையான விசாரணை நடத்தி நீதி வழங்கும் என்று நம்புகிறேன்.

———

ஸிந்து போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்குச் சம்பள உயர்வு

கராச்சி. பிப். 8:—

ஸிந்துபோலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கு விசேஷ 'எக்ஸ்ட்ரா டியூடி' அலவன்ஸை மாதத்திற்கு தலா ரூ 8ம் கொடுக்க ஸிந்து சர்க்கார் அனுமதித்திருக்கிறது, 1950 டிஸம்பர் முதற்கொண்டே இச்சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

காங்கிரஸ் குட்டி இட்லர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாசர்கள்' என்று நான் குற்றவாளிக்கூண்டிலிருந்து கூறுகின்றேன், பல தியாகிகள் வளர்த்த காங்கிரஸ், இன்று குட்டிக் காங்கிரஸ் இட்லர்களால் வளர்க்கப்படுகின்றது தாதாபாய் நௌரோஜி கோபால கிருஷ்ண கோகலே, திலகர், பெசண்ட் ஆகியோரால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் இன்று விளக்கமாக—வெட்கத்துடன் கூறவேண்டுமானால் விபூதி சாமியார்களால் வளர்க்கப்பட வேண்டிய நிலையடைந்துவிட்டது.

வெள்ளையன் ஆட்சியின்போது 'தேசத் துரோகி' என்று கூறப்பட்ட அம்பேத்காரை, இந்தப் புண்ணிய மூர்த்திகள்—அறிவின் ஜோதிகள் ஆட்சிக்கு வந்ததும் அழைத்து மந்திரி பதவி தந்துள்ளனர். அவ்வளவு தூரம் இவர்களுக்கு அறிவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. தான் 'தியாகி' என்று ஒப்புக்கொள்ளாத கோபாலசாமி ஐயங்காருக்கு ரயில்வே மந்திரிப் பதவியளித்துள்ளது, அவர்கள் கிட்டிய சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரை நண்பராக்கிக் கொண்டு, நிதி இலாகா உருப்படவேண்டுமானால் அவரைத்தான் நிதி மந்திரியாக ஆக்கவேண்டும் என்பதையறிந்து அவரை மந்திரியாக்கினார்கள். ஆகஸ்டுப் புரட்சியில் கலக்கவில்லை. ஆகவே காங்கிரசில் சேர்க்காதீர்கள் எனவும், 'ஆகஸ்டு துரோகி' என்றும் அன்பர் ஆச்சாரியாரைக் குறித்து எழுதிக்காட்டினார்கள். கூட்டத்திற்கு வந்தவரைத் 'திரும்பிப்போ' எனக் கூறி, கறியினால் எழுதினார்கள். ஆனால் அவரே, அவர்களால், வங்க கவர்னர் ஆக்கப்பட்டார்-சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர்-ஜெனரல் ஆக்கப்பட்டார். ஹோம்-மெம்பர் பதவியும் தரப்பட்டது, எப்படி இந்தப் பதவிகளையெல்லாம் கொடுத்தீர்கள் என் அருமைக் காங்கிரஸ் நண்பர்களே?! ஒன்று, உங்களுக்கு, வெட்கம், ரோஷம், மானம் இல்லாமலிருக்கலாம்! இப்போதுமட்டும் எப்படி உங்கள் நண்பரானார்?

"உங்களுக்குள்ளேயே இது போன்ற பலவிதப் பித்தலாட்டங்கள் இருக்க, நாங்கள் உங்களுக்குப் பெட்டி தூக்கவில்லை; உங்களடி பணியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக நாக்கிலே நரம்பின்றி, எங்களைப் பார்த்து 'துரோகிகள்' எனக் கூறிப் பொய்ப் பிரசாரம் செய்வதா? புனிதத் தியாகிகள், பாரதமாதாவின் தவப்புதல்வர்கள், 'திராவிட இயக்கத்தினர், ஒற்றுமையைக் குலைப்பவர்கள், நாட்டைப் பிரிப்பவர்கள், ஒரே இந்தியாவை துண்டாடக் கோறுகின்றவர்கள், நாஸ்திகவாதிகள் என்று இந்த ஒற்றுமை வாதிகள், பரந்த மனப்பான்மையினர், ஆஸ்திக வாதிகள் 'ஏக இந்தியா' என்று தடபுடலாகக் கூறிவருகின்றனர். எங்கே இவர்கள் ஏக இந்தியா? எப்போது, ஏக இந்தியாவாக ஏற்பட்டது?

அலெக்சாண்டர், இந்த நாட்டை ஆளவந்த பொழுது இந்தியா ஒன்றா? பாபர் படையெடுத்துவந்த நேரத்தில் இந்தியா ஒன்றா? அக்பர் ஆண்டபொழுது இந்தியா ஒன்றா? அவரது பேரன் அவுரங்கசீப் காலத்தில் இந்தியா ஒன்றா? டச்சுக்காரர் வந்தபொழுது இந்தியா ஒன்றா? எப்போது இந்தியா ஒன்றாயிற்று? ஆங்கிலேயன் ஆட்சிக்கு அநுசரணையாக 'இந்தியா' என்று இந்த உபகண்டத்திற்கு பெயரிடுவதற்கு முன் எந்த நாளிலாவது இந்தியா என்ற பெயராவது உண்டா? 582 சமஸ்தானங்களைத் தனித்தனியே விட்டு, உடம்பிலே பல இடங்களில் புண்கள் இருப்பதைப்போலத்தான், ஆங்கிலேயன் ஆண்டான். அதுவுமல்லாமல், டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்களும் ஆண்டுவந்தனர். பர்மா, பாகிஸ்தான் இவர்களது கண்முன்பே துண்டித்துத் தரப்பட்டதே. எங்கே, பாரத மாதா நன்றாயிருந்தாள்? ஏன் நமது "திராவிடநாடு" பிரிய மட்டும் மறுக்கின்றார்கள்? ஒரே நாகரீகம் பேசுகின்றனர் இந்த உத்தமர்கள். இந்த உபகண்டம் முழுவதும் ஒரே நாகரீகம் இருப்பதாகக் கூறுவது எவ்வளவு தூரம் புரளி என்பதை நாம் நன்கு அறிவோம். வடநாட்டானைப் பார், அவன் உடை, உணவு, பழக்கவழக்கங்கள் கடவுள், மொழி ஆகியவைகள் தென்னாட்டானுக்கு-திராவிட நாட்டானுக்கு மாறுபட்டுத்தானிருக்கிறது. இப்படியிருக்க, ஏக நாகரீகம் பேசுவது, மக்களை ஏய்ப்பதைத் தவிர, வேறு ஏதுவாக இருக்க முடியும்?

"நாம் திராவிடநாட்டிற்குப் பல ஆதாரங்கள் கூறியும் 'இந்தியா ஒன்றேதான்' என்று கூறுகின்றனர் சிந்தனைச் சிறிதும் இன்றி, நம் கூற்றுக்கு மேலும் ஒரு எடுத்துக் காட்டு. தேசியப் பாட்டாக உள்ள 'ஜனகனமன'விலே கூட, 'திராவிட உத்கல வங்க' என்று தான் தாகூர் கூறியுள்ளார். அப்படியிருக்க, அந்தப் பாட்டை எப்படி விட்டு வைத்திருக்கிறார்கள் இந்த, ஏக இந்தியா வாதிகள்? அப்பாட்டைப் பாடுவோரை நாஸ்திகர்கள் என்று கூறுவார்களா இவர்கள்? சட்டப்படி அரசாங்கமே ஒப்புக்கொண்டது என்பதற்கு இதைவிடவேறுஎன்ன சான்று தேவை? படித்த பக்தவத்சலம் போன்றவர்கள் 'நீங்கள் கேட்கின்றதிராவிடநாடுசிறியது ஆகவே நன்கு வாழமுடியாது'' என்று சிந்து பாடிக்கொண்டுவருகின்றனர். எது சிறிய நாடு? ஆறுகோடி மக்களைக்கொண்ட நாடு சிறிய நாடானால், சென்னையில் ஜனத்தொகை 15 இலட்சம் அதைப்போல 5, 6 பங்குகொண்ட சிலோன் தனி நாடாக வாழவில்லையா? ஐரோப்பாவில் 10 இலட்சம் ஜனத்தொகை கொண்ட 'லக்சம்பர்க்' தனித்து வாழவில்லையா? பின் ஏன் நாம் கேட்கின்ற 6 கோடி மக்களைக் கொண்ட சகல வளமும் படைத்த பூகம்பம் ஏற்படாத இயற்கை எல்லைகள் படைத்த நாடு தனித்து வாழ முடியாது?

"மந்திரி பதவி வந்ததும், படித்ததை மறந்துவிட்டனரோ, நமது மந்திரிகள்! அல்லது மறந்தால் தான் மந்திரி பதவி வந்ததோ? தெரியவில்லை. காமராஜருக்குக் காரணங்கள் தெரியாது. அதுபற்றி நாமும் கவலைப்படப் போவதில்லை. ஆனால், ஆழம் தெரியாமல் காலை விடுவதைப் பார்க்கின்றபோது நாம் வருத்தமடைகின்றோம். மந்திரி மாதவமேனன் கூறுகின்ற, காமராஜர் கூறுகின்ற 'ஏக இந்தியா'தான் பெரிய நாடு என்று நினைக்கின்றனர். அகில உலகில், இந்திய உபகண்டம், ஒரு சிறிய நாடுதானே! ஒரே மதிப்புத்தான் தரப்படுகின்றது எல்லா நாடுகளுக்கும். அது போலத்தான், பாகிஸ்தான், பர்மா, சிலோன் ஆகியவற்றிற்கும், நமது திராவிட நாட்டிற்கும் அந்தமதிப்பு ஸ்தானம் மாறப்போவதில்லை. பின் ஏன் பயப்படவேண்டும்? நாம் ஆண்ட நாட்டை பிறர் ஆணை செலுத்தாத நாட்டை நமது இனம் நல்வழிப்பட,-பிறநாட்டான் சுரண்டாதிருக்க தனித்து வாழவேண்டியதுதானே?'' என்று கூறித் தனது உரையை முடித்தார்.

மேலும், வடநாட்டுச் சுரண்டல் மத்திய சர்க்காருடன் பிணைந்திருப்பதால் உண்டாகின்ற லாப நஷ்டங்கள், ஆரியர் சூழ்ச்சி, கடவுள், மதம், புராணங்கள் மக்களை எந்தெந்த வகைகளில் கீழ்நோக்கி இழுத்துச் செல்லுகின்றன என்பது பற்றியும் மிகவிரிவாக, மூன்று மணி நேரம் தனக்கே உரித்தான பாணியில் பேசி முடித்தார். தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் நன்றிகூற பத்து மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

பல மாணவர்கள் தோழர் நெடுஞ்செழியனிடம் கையெழுத்துப் பெற்றுச் சென்றனர்.

போலீஸ் அதிகாரி வீட்டிலேயே திருடன் புகுந்தான்

புதுடில்லி, பிப். 8—

போலீஸ் அதிகாரிகள் வசிக்கும் விடுதியிலுள்ள ஒரு போலீஸ் இலாகா தலைவர் வீட்டில் ஒரு திருடன் புகுந்து எல்லாப் பெட்டிகளையும் உடைத்து எதையோ தேடியிருக்கும் விபரம் இப்போது கிடைத்திருக்கிறது.

அந்த வீட்டிலிருந்து எதுவும் திருட்டுப் போகவில்லை. திருடன் என்ன தேடியிருப்பான் என்பதும் உத்தேசிக்க முடியவில்லை திருடன் சுமார் இரண்டுமணி நேரமாவது அங்கிருந்திருந்தால்தான் அவ்வளவு பெட்டிகளையும் உடைத்து தேடியிருக்கமுடியும் என்று கூறப்படுகிறது.

ஜலவாயு குண்டை பற்றவைக்க அணுக்குண்டு!

ஜலவாயுகுண்டை வெடிக்கச் செய்ய அவைகளை பற்ற வைகக மிக அதிக உஷ்ணம் வேண்டியிருக்கிறதாம். இத்தகைய உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடியது அணுக்குண்டு தான் என்றும் இவைகளை பற்ற வைக்கவென்றே சிறிய அணுக் குண்டுகள் செய்யப்படவேண்டியிருக்கிறதென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அணுக்குண்டு வெளிப்படுத்தும் உஷ்ணம் கிட்டத்தட்ட சூரிய உஷ்ணத்திற்கு சமமானதாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

இனி நடப்பவை

சேத்துப்பட்டு:—வ. உ. சி இளைஞர் கழக சார்பில் கலைத்திருநாள் 11-2-51 காலை 8-30 மணிக்கு கோகலே மண்டபத்தில் எஸ். இராமநாதன் (முன்னாள் அமைச்சர்) தலைமையில், நடக்கும் அது போது க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், கே ஏ. மதியழகன் அவர்கள் பேசுவார்கள். நுழைவுக் கட்டணம் 0—4—0

* * *

சென்னை:-பகுத்தறிவுப் பாசறை (சாம்பையர் வீதி)யின் அங்கத்தினர் தேர்தல் கூட்டம் 11-2-51 காலை 9 மணிக்கு நடைபெறும். அங்கத்தினர்கள் தவறாது வர கோரப்படுகிறார்கள்.

* * *

சென்னை:—எழும்பூர் திருவள்ளுவர் கழக நிர்வாகக் கூட்டம் 11-2-51 ஞாயிறு காலை 9 மணிக்கு எழும்பூர் கெங்குரெட்டி தெரு 8ம் நெ இல்லத்தில் எம் ஜி. பெரியசாமி அவர்கள் தலைமையில் கூடும்.

* * *

வியாசர்பாடி:—கன்னிகாபுரம் இளைஞர் கழக அறையில் 11-2-51 காலை 8 மணிக்கு தோழர் முருகேசனார் தலைமையில் 'தற்கால தமிழரின் நிலை' என்ற பொருள் பற்றி தினகரன், வேதகிரி, பககிரிசாமி, தாமோதரன், குப்புசாமி முதலியவர் பேசுவார்கள்.

* * *

புளியந்தோப்பு (சென்னை):—18-வது வட்ட தி. மு க. கிளை உறுப்பினர் கூட்டம் 9-2-51 மாலை 6-30 மணிக்கு நடைபெறப்போவதால் உறுப்பினர்கள் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அருப்புக்கோட்டை நெசவாளர்களின் அறப்போர்

5-ம் நாள் மறியல்

அருப்புக்கோட்டை, பிப். 6—

இன்று பகல் 3-30 மணியிலிருந்து 5 மணி வரை அமைதியான முறையில் மறியல் நடந்தது. தாசில்தார் அலுவலகம் நகருக்கு வெளியில் இருந்தாலும் சுமார் 15,000 பேர் (தாய்மார்கள் பல்லாயிரவர்) கூடியிருந்து ஆர்வத்துடன் மறியலைக் கண்டுகளித்தனர். "இப்படியும் ஒரு அரசாங்கம் இருக்குமா?'' என்ற கேள்வியை ஒருவர்க்கொருவர் கேட்டுக்கொண்டனர்.

ஏஜெண்டு தேவை

சேலம் டவுன் முழுமையும் 'மாலைமணி'' விற்பனை செய்ய முன்பணம். கட்டக்கூடிய ஏஜெண்டு தேவை. விண்ணப்பிக்கவும்.

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.